# மெட்ரோ ரெயிலில் 6 கோடி பேர் பயணம்

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கடந்த 2015-ம் ஆண்டு தனது சேவையை தொடங்கியது. மெட்ரோ ரெயிலில் 2015-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ந்தேதி முதல் கடந்த ஆண்டு (2019) டிசம்பர் மாதம் 31-ந்தேதி வரை 6 கோடியே 8 லட்சத்து 65 ஆயிரத்து 985 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

கடந்த ஆண்டில் மட்டும் 3 கோடியே 28 லட்சத்து 13 ஆயிரத்து 628 பேர் பயணம் செய்துள்ளனர் என்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.